REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: கார்த்திகை 29உ செவ்வாய் (14—12—54) ★ ★ வெளியூர்: கார்த்திகை 30உ புதன் (15—12—54) [இதழ் 157

இறப்பிலும் குடும்பப் பற்று!

ஏழு வயது முதல் 14 வயது வரை உள்ள நான்கு சிறுர்கள் தங்கள் பெற்றேர்களுடன் விஷம் குடித்து மாண்டனர்.

அந்த நான்கு குழந்தைகளும், பள்ளி ஆசிரியர்களுக்கு, தங்களுடைய இறுதி மரியாதையைச் செலுத்தி கடிதம் எழுதியுள்ளனர். பெற்றேர்களும் மொத்தத்தில் 14 பிரிவுக் கடிதங்களைத் தீட்டியுள்ளனர்.

61 வயதடைந்துள்ள குஷோ கொய்ஷுமி என்ற தந்தையார், எங்கு வேலை தேடியும் கிடைக்காததாலும், சொந்த செப்பு உருக்குத் தொழிலைத் துவங்க முடியாததாலும், இக்கொடுவினைக்கு உள்ளானதாகத் தெரிகிறது.

'சுடுவதைக் கைவிடு! வேறு முறையைத் தேடு!'

'மக்களை மனிதர்களாகக் கருதி பாதை வகு'

'காந்தீய வழியில் நம்பிக்கையுண்டு என்பதைச் செயலில் காட்ட வேண்டும்'

'அவர் பெயரைக் கூறும் உரிமையையாவது தவிர்க்க வேண்டும்'

மக்கள் சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர்களுள் ஒருவரான டாக்டர் ராம் மனோஹர் லோகியா, 'போலீசார் எப்போது சுடலாம்' என்பது குறித்து, ஐதராபாத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியிருக்கிறார். அவர் பேசியதின் சாரமாவது :—

மாற்றம் வேண்டும்

உலகிலேயே மிக்க மென்மைத் தன்மை பெற்றவர்கள் இந்தியர்கள்தான்.

போலீசார் சுடுவதற்கு சில கொள்கைகளை நிர்ணயிக்க வேண்டும். குறுகிய நிர்வாக நிலையிலிருந்து போலீசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தல் எனும் பிரச்சினையைக் கவனிக்கக்கூடாது; மக்களை மனிதர்களாகக் கருதி நடத்தும் உயரிய விரிந்த நிலையிலிருந்தே பிரச்னையைக் கவனிக்க வேண்டும்.

பாமர மக்களுடைய ஆத்திரத்தைத் தணிக்க துப்பாக்கிப் பிரயோகத்தை மட்டுமே கையாளாமல் வேறு புதிய முறை கண்டு பிடிக்க வேண்டும்.

துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தப்பட்டமட்டில் வகுப்பு நலமின்றி ஒரே மாதிரியான பொது நியதியைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அரசியல் கட்சிகள் கடமை

போலீசார் சுட ஆரம்பிக்கும் முன் நெருக்கடியான நிலையைச் சமாளிக்க அரசியல் கட்சிகள் தலையிட்டு, துப்பாக்கிப் பிரயோகத்தைத் தவிர்க்க முயற்சிக்க வேண்டும்.

சுடுவதைத் தடுக்க ஆளும் கட்சிக்கே அதிகப் பொறுப்புள்ளது.

சுட வேண்டிய காலம்

மக்கள் கூட்டம் கொலை, தீ வைத்தல் முதலியவற்றில் ஈடுபடும் போதுதான் போலீசார் சுடவேண்டும் என்பது என்னுடைய கருத்து. சிலரைக் கொன்றுவிட்ட அல்லது அதிகமான பேர்களைக் கொல்லக் காத்திருக்கும் மக்கள் கூட்டத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்காக நான் எந்தக் கட்சி சர்க்காரையும் ராஜிநாமாச் செய்யும்படி கேட்கமாட்டேன்.

பொதுவுடைமையினர் நிலை

கம்யூனிஸ்டுகள் அதிகாரத்திலிருந்தால், போலீசார், அதிகாரவர்க்கத்தினரையே கொல்லுவர்; வேறு கட்சியினர் அதிகாரத்திலிருந்தால் கம்யூனிஸ்டுகள், போலீசார் தொழிலாளர் வர்க்கத்தினரைச் சுட்டுக் கொன்றுவிட்டதாகக் கூறுவர்.

நம்பிக்கை இருந்தால்...

காங்கிரஸ் சர்க்காருக்கு காந்தியாரின் நம்பிக்கை இருக்கு

பெங்களூர் மாநாடுகள்

★

வரும் டிசம்பர் 18, 19 ஆகிய இரு நாட்களிலும் கர்நாடக தி. மு. கழக முதலாவது சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள் பெங்களூரில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், பெங்களூர் நகரில் துணி ஆலை ஒன்றில் நிகழ்ந்த சம்பவங்களை யொட்டி 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதால் மேற்கண்ட தேதிகளில் மாநாடுகள் நடைபெற இயலாது, மாநாடுகளை ஒத்தி வைக்கவேண்டியது அவசியமாகிவிட்டது.

மாநாடு நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படுமென வரவேற்புக் குழுவினர் அறிவிக்கின்றனர்.

மானுல் எந்த நிலையிலும் போலீசார் சுடுவதை அனுமதிக்கக் கூடாது.

இல்லாவிடின், சுடுவதில் நம்பிக்கை கொண்டிருந்தால் அவர்களுக்கு, காந்தியாரின் பெயரைச் சோல்ல உரிமை இல்லை.

நுழைவது சுலபம்! வருவது கடினம்!!

தெளிவான பெரும்பான்மை பலம் இருந்தாலன்றி ம. சோ. கட்சி மந்திரி சபை அமைக்கக் கூடாது.

திரு—கொச்சி அனுபவத்தால், பதவியைப் பெறுவது சுலபம் என்பதும், வெளிவருவது கடினம் என்பதும் தெரிகிறது."

மேற்கு பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள இடம் பெயர்ந்தவர்களுள் பாத்தியதை மனுக்கள் சமர்ப்பித்துள்ளவர்களுக்கு, இடைக்கால நஷ்ட ஈட்டுத் தொகையாக இதுவரை சுமார் 6 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திருமண வயது நிர்ணயம்!

ஆண்களுக்கு 18; பெண்களுக்கு 15

புதுடில்லி, டிச. 13—

திருமண, மணவிலக்கு பற்றிய மசோதா இன்று டெல்லி ராஜ்ய சபையின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கூட்டுத் தனிக் குழு, திருமண வயதாக ஆண்களுக்கு 21 என்றும், பெண்களுக்கு 18 என்றும் சிபாரிசு செய்ததற்குப் பதிலாக ஆண்கள் வயதை 18 ஆகவும், பெண்கள் வயதை 15 ஆகவும் வைத்துக் கொள்ள சபை ஒப்புதல் தெரிவித்திருக்கிறது.

இன்று மசோதாவின் மூன்று பிரிவுகள் சில திருத்தங்களுடன் நிறைவேறின.

"அமெரிக்க ஒற்றர் விடுதலையில் தலையிட ஐ. நா.-விற்கு உரிமை இல்லை"

செஞ்சீனப் பத்திரிகை தகவல்

ஹாங்காங், டிச. 13—

கம்யூனிஸ்டு சீனவில் வேவு பார்த்தார்கள் என்ற குற்றம் சாட்டப்பட்டு 11 அமெரிக்க விமானிகள் சிறை வைக்கப்பட்டுள்ளனரல்லவா? அவர்களை விடுதலை செய்யக் கோரி ஐ. நா. சபை நிறைவேற்றிய தீர்மானம் குறித்து சீன அரசாங்கப் பத்திரிகையான 'பீப்பிள்ஸ் டெய்லி' என்ற இதழ் 'அமெரிக்க ஒற்றர்களை சீன தண்டித்தது சம்மந்தமாகத் தலையிடுவதற்கு ஐ. நா. விற்கு உரிமை இல்லை' என்று கருத்தறிவித்துள்ளது.

"இப்பிரச்சினை பற்றி ஐ. நா. விவாதித்ததும் அமெரிக்கச் சூழ்ச்சியால் ஐ. நா.-வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் சட்ட விரோதமானதும் அநியாயமானதுமாகும்" என்றும் அந்த இதழ் கூறியிருக்கிறதாம்.

[1949-ல், சீன, மக்கள் சீனவாக மாறியதிலிருந்து இன்று வரை ஐ. நா.-வில் சீன நுழைய முடியாதவாறு அமெரிக்கா தடுத்து வருகிறது. பார்மோசாவில் பதுங்கியிருக்கும் சியாங்கின் சர்க்கார், ஐ. நா.-வில் இடம் பெற்றிருப்பதும் நினைவிலிருக்க வேண்டியதாகும்.]

'மந்திரி பதவியையே கனவு காண்கின்றனர்'

'ஆறு ஆண்டு காலத்தில் சாதித்தது ஒன்றுமில்லையே'

திரு-கொ. காங்கிரஸ் நிலை பற்றி ஒரு காங்கிரஸ் குழு உறுப்பினர்

"சென்ற ஒன்பது மாதங்களில், தங்களுடைய ஆட்சி காலத்தில் எந்தவித நன்மையும் ம. சோ. கட்சி செய்யவில்லை என காங்கிரஸ் கட்சி கூறுகிறது. ஆனல், கடந்த ஆறுண்டு காலமாக நடைபெற்ற சொந்த ஆட்சியில், காங்கிரஸ் கட்சி சாதித்துள்ளது என்ன என்பதை நான் அறிய அவாவுறுகிறேன்."

"வறுமையாலும், வேலையின்மையாலும் மாநில மக்கள் நொந்த வாழ்வில் தவித்துக்கொண்டிருக்கும்பொழுது, அதிகார அரசியலில் காங்கிரஸ் கட்சி ஆர்வம் காட்டுகிறது. மந்திரி பதவியைக் குறித்து காங்கிரஸ் கட்சியினர் கனவு காண்பதைத் தவிர வேறொன்றுமில்லை. மக்களுக்கு நலஞ் செய்ய முனைகிற காலம் வரை, இன்றைய ஆட்சியை நான் ஆதரிக்கத் தயார்."

—இவ்வாறு, திரு—கொ. காங்கிரஸ் மாநிலக் குழு உறுப்பினரான டாக்டர் வ. ஆர். மேனன், நாயரம்பலம் என்ற சிற்றூரில் ஒரு நடுத்தரப் பள்ளி துவக்க விழாவில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

அதே கூட்டத்தில் கலந்து கொண்ட பட்டம் தாணுப்பிள்ளை, காங்கிரஸ் கட்சியின் முடிவு தனக்கு வியப்பளிப்பதாக இருக்கிறது என்றும், கடந்த ஒன்பது மாதங்களில் தனது அமைச்சர் குழு, செய்துள்ள 'நலங்கள்' பற்றியும் கூறியுள்ளார்.

ஒரு காங்கிரஸ் ஆட்சி உருவாவதை ம. சோ. கட்சி அனுமதிக்காது என்றும், சிறந்த கொள்கை அடிப்படையில் இடதுசாரி கட்சிகளடங்கிய ஒரு கூட்டு முன்னணி ஆட்சியை ஆதரிக்க ம. சோ. கட்சி தயார் என்றும், அவர் கூறினர்.

பூனுவுக்கருகிலுள்ள பிர்ப்ரியில் 'ஏற்படுத்தப்பட்டு வரும் பெனிசிலின்' உற்பத்திச்சாலை நாளொன்றுக்கு 10,000 மெகா யூனிட்டுகள் வீதம் உற்பத்திசெய்யும்.

மேற்கு பாகிஸ்தான் இணைப்பு

ஜின்னு பிறந்த தினத்தன்று நடைபெறுமாம்

மேற்கு பாகிஸ்தான் முழுமையும் ஒரே மாநிலமாக இணைக்கப்படுகிறது என்ற பேரறிக்கை, வரும் டிசம்பர் 25-ந் தேதியன்று வெளியிடப்படுமாம்.

அன்றுதான் காலஞ் சென்ற ஜின்னுவின் பிறந்த நாளும் வருகிறதாம்.

வரும் ஜனவரி 1-ந் தேதி முதல் இப்போது மேற்குப் பாகிஸ்தானின் பல மாநிலங்களிலும் சர்க்கார் காரியதரிசிகளாக இருப்பவர்கள், புதிய மேற்குப் பாகிஸ்தான் மாநில சர்க்கார் காரியதரிசிகளாகப் பதவியேற்பர் எனத் தெரிகிறது.

தடுப்புக் காவல் சட்டம்

மேலும் 3 ஆண்டுகள் நீடிக்கிறது

மக்கள் சபையில் மசோதா நிறைவேற்றம்

தடுப்புக் காவல் சட்டத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீடிக்கும் மசோதா, மத்திய மக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டு விட்டது.

மாநில சர்க்கார்கள் எல்லாம், இந்தச் சட்டம் மேலும் சிறிது காலத்துக்கு நீடித்து அமுலிலிருக்க வேண்டுமென்று கருதுவதாகவும், டெல்லி மக்கள் சபை இந்த மசோதாவை நிறைவேற்று விட்டால், இந்த விஷயம் பொதுப் பட்டியலிலிருப்பதால், மாநிலங்கள் தனித்தனியாக மசோதா கொண்டு வந்து நிறைவேற்றும் என்றும், இம்மசோதா பற்றிப் பேசுகையில், உள்நாட்டமைச்சர் கட்ஜு குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ், கருத்தைத் தெரிவிப்பது மட்டும் நடவடிக்கை எடுப்பதற்குக் காரணமாகாதென்றும், ஒழுங்கை நிலைநிறுத்தவே இச்சட்டம் உபயோகிக்கப்படுகிறதென்றும், சட்டத்தை மீறி குழப்பம் உண்டுபண்ணுகிறவர்களுக்கும், தவறுதலான கருத்துடையோருக்கு மட்டுமே இது கொண்டு வரப்படுகிறது என்றார்.

ரப்பர் தோட்டத்தில் வேலை நிறுத்தம்

திருச்சூர், டிச. 11—

ஐரோப்பியர்களுக்குச் சொந்தமான பாலபில்லா ரப்பர் தோட்டத்தில் 1,800 தொழிலாளர்கள் காலவரையறையின்றி வேலை நிறுத்தம் செய்கின்றனர்.

அதிகக் கூலி தேவை என்றும், வேலை நிலையில் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும் கோரி இவர்கள் வேலை நிறுத்தம் செய்கின்றனர்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 14—12—1954 செவ்வாய்

செவி சாய்ப்பார்களா?

★

இந்தியத் துணைக்கண்டத்தில் மலேயா போன்ற வெளிநாடுகளிலிருந்து சவ்வரிசி இறக்குமதி ரத்து செய்யப்பட்டதை யொட்டி, இந்தியாவிலேயே குறிப்பாக தென்னாட்டில் செய்யப்படும் சவ்வரிசியின் உற்பத்தி, பல லட்சம் பேர்களுக்கு தொழில் தரக்கூடிய அளவு பெருகியது பற்றியும், திராவிடத்தில் மரவள்ளிக்கிழங்கிலிருந்து தயாராகும் சவ்வரிசி, 'உண்மையான' சவ்வரிசியல்ல என்ற ஒரு 'நொண்டி'க் காரணத்தைக் காட்டி, மேற்கு வங்க மாநில அரசாங்கம், அந்த சவ்வரிசி அந்த மாநிலத்தில் விற்கப்படுவதைத் தடுக்க முனைந்தது குறித்தும் நாம் ஏற்கனவே ஒருமுறை இரண்டு மாதங்களுக்குமுன் எழுதியிருந்தோம்.

அப்போதே, இந்தப் பிரச்சினைக்கு மூலகாரணமானவர்கள் மத்திய சர்க்கார்தான் என்றும், பிரச்சினைக்குப் பரிகாரம் காண இனியாவது அவர்கள் திராவிடத்தில் உற்பத்தியாகும் சவ்வரிசியை 'திராவிட சவ்வரிசி' என்றோயினும், 'தென்னாட்டு சவ்வரிசி' என்றோயினும் 'முத்திரை'யிட்டு, விற்பனைக்கு அனுமதிக்க முன்வர வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

இன்றுவரை இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் காண மத்திய சர்க்கார் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள் என்பதற்கான விபரம் எதும் காணோம். சவ்வரிசி உற்பத்தி அதிகமாயிருப்பது திராவிடத்தில்தானே! அந்தத் தொழில் நசித்துப் போனால் திராவிடர்தானே வேலையின்றித் தவிப்போர் பட்டியலில் மேலும் முதன்மை பெறுவர். அதனால், இந்தியப் பேரரசு ஏன் கவலை கொள்ளப் போகிறது? வடநாட்டவரின் இந்த வழக்கமான போக்கை நாமறிந்ததுதானே!

சவ்வரிசி உற்பத்தித் தொழிலுக்கு மேலும் புதிய புதிய குந்தகங்கள் உருவாகும்போது, நாம் அவற்றை எடுத்துக் காட்டாமலிருக்க முடியாதே!

சவ்வரிசி ரயில் மூலம் அனுப்பப்படுவதற்கு, கட்டணச் சலுகை இதுகாறும் தரப்பட்டு வந்தது. இப்போது, கல்கத்தா நகரசபை, 'தென்னகத்தில் உற்பத்தியாகும் சவ்வரிசி உண்மையான சவ்வரிசி அல்ல,' என்ற முடிவுக்கு வந்ததையொட்டி, மேற்கு வங்க மாநில அரசாங்கம் அம்மாநிலத்திற்குள் இந்த 'சவ்வரிசி' இறக்குமதியைத் தடை செய்ய முனைந்தார்கள் அல்லவா? அதன் பின்னர், இந்த முடிவின் எதிரொலியாக, இந்திய ரயில்வேக்களின் மூலமாக, சவ்வரிசி அனுப்பப்படுவதற்கு இதுகாறும் தரப்பட்டு வந்த சலுகை ரத்து செய்யப்பட்டு விட்டது. இந்த விசித்திரமான உத்திரவை, இந்தியப் பேரரசின் நேரடி நிர்வாகத்திலிருக்கும் இரயில்வே இலாக்காவினர்தான் பிறப்பித்துள்ளனர். சலுகை ரத்து செய்யப்பட்டதினால், சவ்வரிசி அனுப்புவதற்கு 'வாகன்' ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் அதிகக் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது!

வாகன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் அதிகக் கட்டணம் என்பது, ஏறத் தாழ, குடிசைத் தொழிலையொத்த ஒரு தொழிலை, அது வெகுவாகப் பாதிக்கும் என்பது சொல்லாமலே விளங்கும்.

சவ்வரிசியை வாங்கி விற்பனை செய்கிற வியாபாரிகளும், இந்தக் கட்டண உயர்வை ஏற்றுக்கொள்ள இயலாதெனக் கைவிரித்துவிட்டார்கள்.

இந்த நிலையில், சவ்வரிசியின் உற்பத்திச் செலவில்தான் இந்தக் கட்டண உயர்வு சேர்க்கப்பட வேண்டியிருக்கும். உற்பத்திச் செலவு அதிகமானால், சவ்வரிசியின் விற்பனை விலை அதிகமாகும். திடீரென ஒரு பொருளின் விலை அதிகமாகுமானால், சந்தையில் 'கிராக்கி' குறையும். அப்படிப்பட்ட ஒரு நிலை, பொருள் உற்பத்தியையே பாதிக்கும் என்பதும் யாவரும் அறிந்ததாகும்.

உற்பத்திச் செலவில் ஏற்றம் ஏற்பட்டு, அதனால் நஷ்டம் ஏற்படுமோ என்ற அச்சத்தால், தொழிலையே மூடிவிடக்கூடவேண்டிய அவலநிலையும் பிறக்கக்கூடும். அந்தநிலை ஏற்படுமானல், அத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் பல இலட்சம் பேரும், ஏற்கனவே வேலையின்றி அதனால் வாழ வழியற்று, இந்த நாட்டு 'மன்னர்கள்' நாங்கள்தான் என்பதற்கு இலக்கணம் வரைகிற எண்ணற்றோரின் எண்ணிக்கையை அதிகரிப்பர்.

எனவே, திராவிடத்தின் சிறியதொரு தொழிலாக, பல லட்சம் பேரை வாழ்வித்துக் கொண்டிருக்கும் சிறியதொரு தொழிலாக உள்ள இந்த சவ்வரிசி உற்பத்தித் தொழிலுக்கு, தொடர்ந்து குந்தகம் விளையும் வகையில் இந்தியப் பேரரசு நடந்துகொள்வது, தென்னாட்டை, வடநாட்டவர் புறக்கணிக்கின்றனர், தென்னாட்டு நலன்களை அலட்சியப் படுத்துகின்றனர் என்ற உண்மைக்கு மேலும் ஒரு சான்றாக அமையும்.

எனவே உடனடியாக இரயில்வே இலாக்காவினர் விழித்துக்கொண்டு, சவ்வரிசிப் போக்குவரத்துக்குத்தரப்பட்ட கட்டண சலுகையை மீண்டும் அமுல் செய்ய முன்வரவேண்டும் எனக் கோருகிறோம்.

இதில், மற்றுமோர் வேடிக்கையுமுண்டு. 'தென்னாட்டு சவ்வரிசி உண்மையான சவ்வரிசி அல்ல,' என்ற முடிவை மேற்கொண்டது இந்தியப் பேரரசு அல்ல! மாறாக, அந்தப் பேரரசின் ஒரு பகுதியாக உள்ள மேற்கு வங்க மாநிலம்தான்! அந்த முடிவுக்கு இந்தியப் பேரரசின் நேரடி நிர்வகத்தின்கீழ் உள்ள இரயில்வே இலாகா எப்படிக் கட்டுப்பட்டது என்பதுதான் நமக்கு விளங்கவில்லை. மேலும், 'உண்மையான சவ்வரிசி இல்லை' என்ற முடிவு, மேலும் பரிசிலனைக்கு அப்பாற்பட்டதும் அல்ல. 'இது உண்மையானதுதானா, தேவையான சத்துடையதா, அல்லவா?' என்பதை, இந்திய அரசாங்கம், நிபுணர் குழு ஒன்றை நியமித்து ஆராய்ந்தறிந்து, அப்போதும், 'உண்மையான சவ்வரிசி அல்ல,' என்ற முடிவே வெளிவருமானல், இந்திய இரயில்வே இலாகா, இந்தக் கட்டணச் சலுகை ரத்துக்கான உத்திரவைப் பிறப்பித்திருக்கலாம்.

அதற்கிடையில், தன்னை எந்த வகையிலும் கட்டுப்படுத்த முடியாத மேற்குவங்க மாநில அரசாங்கத்தின் முடிவை, இந்திய இரயில்வே இலாகா ஏற்றுக் கொண்டு, சலுகையை ரத்து செய்திருப்பதானது, 'திராவிடத் தொழில்களை நசுக்க எப்போது சந்தர்ப்பம் கிடைக்கும்,' என்று அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனரோ என்ற சந்தேகத்தை வலுப்படுத்துகிறது என்றும் கருத வேண்டியிருக்கிறது.

எனவே, இந்தியப் பேரரசு, மீண்டும் உடனடியாக முன்பு தரப்பட்ட கட்டணச் சலுகையை அமுல் செய்ய தயக்கமோ, தாமதமோ காட்டலாகாது என, மீண்டும் வற்புறுத்துகிறோம்.

பர்மாவில் நவீன எஃகு தொழிற்சாலை

ஜெர்மானியக் கம்பெனி நிறுவுகிறது

பர்மாவில் ரங்கூனுக்கு வெளியில் ஆசியாவிலேயே மிக நவீனமானதொரு எஃகு உற்பத்திச் சாலையை நிறுவுவதற்கான ஒப்பந்தம் ஒன்றை பர்மிய அரசாங்கம் மேற்கு ஜெர்மனியில் உள்ள 'டெமாக்' என்ற நிறுவனத்துடன் செய்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்படும் அந்த எஃகுத் தொழிற்சாலையில் 13,800 டன் எஃகுப் பொருள்கள் ஆண்டுதோறும் உற்பத்தியாகுமெனத் தெரிகிறது.

அந்த உற்பத்திப் பொருள்களில் இரும்புத் தகடுகள், கம்பிகள், வளையங்கள், சங்கிலிகள் இவை எல்லாம் இடம் பெறுமாம்.

அகில உலக புத்த பல்கலைக் கழகம்

நிறுவ முயற்சிக்குமாறு ரங்கூன் புத்த மாநாட்டில் தீர்மானம்

இங்கு நடைபெற்ற உலக புத்த மாநாட்டில், "அகில உலக புத்த பல்கலைக் கழகம் ஒன்று நிறுவி, அங்கு, புத்த 'மிஷன்'கள் பயிற்சியளிக்கப்பட்டு, உலகெங்கணும் புத்தமதப் பிரச்சாரத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இதற்கான முயற்சியை மேற்கொள்ள எல்லா புத்த அனுதாபிகளும் முன்வர வேண்டும்," என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

"புத்தமதக் குழந்தைகள், புத்த மதச் சூழ்நிலையில் வளர்க்கப்பட்டு, புத்தவழி வாழ்க்கை நடத்த போதிக்கப்பட வேண்டும்," என்றும் மாநாட்டில் பேசப்பட்டதாம்.

"அந்தக் குழந்தைகள், அப்போதுதான் மனித சமுதாயம், மகிழ்ச்சியுடனும் சமாதானத்துடனும் வாழப் பாடுபடும்," என்றும் எடுத்துக் காட்டப்பட்டது.

சுதந்திரக் கதவுக்கு 10 சாவிகள்!

உரிமைகள் மசோதா பற்றி விளக்கம்

அமெரிக்கச் சரித்திரத்தில் 1791 டிசம்பர் 15-ந் தேதி ஒரு மாபெரும் நாளாகும். அமெரிக்க அரசியல் அமைப்பின் முதல் பத்து திருத்தங்கள் அன்று சட்டமாயின.

பேச்சு, பத்திரிகை துறைகளில் சுதந்திரமும், குறைகளைப் போக்குவதற்கு அரசாங்கத்துக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கும் உரிமையும், ஜூரிகள் முன்னிலையில் விசாரணை நடத்தும் வசதியும் இந்த சுதந்திர சாசனம் மூலம் அவர்களுக்குக் கிடைத்துள்ளது.

இத்தகைய அடிப்படை உரிமைகள் அடங்கியுள்ள அரசியல் அமைப்புகளைக் கொண்ட பல நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.

உரிமைகள் மசோதாவின் ஷரத்துக்கள் பின்வருமாறு:—

பேச்சுரிமை, பத்திரிகை சுதந்திரம், அமைதியாக ஒன்று கூடும் உரிமை, அரசாங்கத்திற்கு மனு செய்துகொள்ளும் உரிமை முதலியவைகளை முதல் திருத்தம் உத்தரவாதம் செய்கிறது.

இரண்டாவது திருத்தம், மக்கள் ஆயுதம் தாங்கும் உரிமை வழங்குகிறது.

வீட்டு சொந்தக்காரர் சம்மதம் பெறாமல், படையினர், தனிப்பட்டவர்கள் வீட்டில் முகாம் செய்யலாகாது என்று மூன்றாவது திருத்தம் உறுதி கூறுகிறது.

வாரண்டின்றி யாரையும் கைது அல்லது சோதனை செய்வதில்லை; எந்த வீடுகளும், சாமான்களும், தஸ்தாவேஜுகளும் கைப்பற்றப்படமாட்டா என நான்காவது திருத்தம் கூறுகிறது.

ஜூரிகள் குற்றம் சாட்டாமல் யாரும் பெரிய குற்றங்களுக்கு விசாரணை செய்யப்படமாட்டார்கள்; ஒரே குற்றத்திற்கு பன்முறை விசாரணை கூடாது; சட்ட சம்மதமின்றி தண்டனை விதிக்கலாகாது; குற்றவாளி தனக்கெதிராக சாட்சியமளிக்கும்படி நிர்ப்பந்திக்கப்படலாகாது; நியாயமான விலை கொடுக்காமல் யாருடைய சொத்தையும் பொதுஜன உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளலாகாது. இந்த பாதுகாப்புகளை ஐந்தாவது திருத்தம் வழங்குகிறது.

குற்றம் நடந்த ஜில்லாவில் குற்றவாளியை துரிதமாக பகிரங்க விசாரணை நடத்தவேண்டும்; மிகைப்படுத்திக் கூறாமல் குற்றப் பத்திரிகை படித்தவுடன் பாரபட்சமற்ற ஜூரியின் உதவியுடன் விசாரணை நடத்தவேண்டும்; எதிரிக்கு வக்கீல் வைத்துக்கொள்ளும் உரிமை; எதிரியின் சாட்சிகள் வாக்குமூலம் கொடுக்க கட்டாயமாக வரவழைத்தல்; எல்லாசாட்சிகளும் எதிரியின் முன் வாக்குமூலம் கொடுக்கவேண்டும்—இந்த உரிமைகளை ஆறாவது திருத்தம் அளிக்கிறது.

20 டாலர் பெறுமானத்திற்கு மேற்பட்ட தொகைக்கான தாவாக்கள், ஜூரிகள் உதவியுடன் நடைபெறவேண்டும் என்று ஏழாவது திருத்தம் உத்தரவாதமளிக்கிறது.

கிரிமினல் வழக்குக் குற்றவாளிகளை ஜாமீனில்விட அசாதாரணமான ஜாமீன் தொகை கோருவது, அசாதாரணமான அபராதம் விதிப்பது, இயற்கைக்கு மாறாக கொடூரமான தண்டனையளிப்பது முதலியவைகளை எட்டாவது திருத்தம் தடை செய்கிறது.

அரசியல் அமைப்பில் பிரஸ்தாபிக்கப்படாத உரிமைகளை மக்களிடமிருந்து பறிப்பதை ஒன்பதாவது திருத்தம் தடை செய்கிறது.

மத்திய அரசாங்கத்திற்கு ஒதுக்கப்படாத அதிகாரங்களும், மாநிலங்கள் அனுபவிக்கலாகாது என்று அரசியலமைப்பினால் தடை செய்யப்படாத அதிகாரங்களும், மாநிலங்களோ, அதன் மக்களோ கையாளலாம் என பத்தாவது திருத்தம் விவரிக்கிறது.

பத்தரை கோடி டாலர்கள் அமெரிக்க உதவி

பாகிஸ்தான் அரசாங்கம்பெறுகிறது

பல ரகப் பொருள்களும் கிடைக்குமாம்

சுமார் பத்தரை கோடி டாலர் மதிப்புடைய அமெரிக்கப் பொருளாதார உதவிக்கான ஒப்பந்தம் ஒன்று அமெரிக்கா—பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடையே இன்னும் இரண்டொரு தினங்களில் கையெழுத்தாகலாம் எனத் தெரிகிறது.

திட்டப்படி, உதவியின் முதல் தவணை, வரும் ஜனவரியில் கராச்சி வரக்கூடுமாம்.

விவசாயப் பண்ணைகளுக்கான உபரிப் பொருள்கள், தொழிலுக்கான மூலப் பொருள்கள், சாதாரணமான உபயோகத்திற்குத் தேவையான சாமான்கள், இவையெல்லாம் அமெரிக்க உதவித் திட்டத்தின் கீழ் பாகிஸ்தானிற்குக் கிடைக்குமெனத் தெரிகிறது.

முதல் முதல் வரும் பொருள்களில், துணிகள், எஃகு, எஃகுப் பொருள்கள், எண்ணெய் வகைகள் மருந்துகள், பாகிஸ்தான் துணி ஆலைகளின் உபயோகத்திற்கான உயர் ரகப் பருத்தி இவை இடம் பெறுமாம்.

தென்னாப்பிரிக்கா குடியரசாக நிபந்தனைகள்

வெள்ளையர் ஆதிக்கம் நீடிக்க வேண்டுமாம்

"தென்னாப்பிரிக்கா ஒரு குடியரசாக வேண்டுமானல், சில பல அடிப்படைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இவற்றில், வெள்ளையர் ஆதிக்கம் தொடர்ந்து அங்கு நிலவ வேண்டும் என்பதும் ஒன்றாகும்," என்று, புதிய பிரதமர் ஸ்ட்ரீடம் தெரிவித்திருக்கிறார்.

வெள்ளையரல்லாதாருக்கென ஒதுக்கப்படும் பகுதிகளில், அவர்கள், தங்கள் தன்மைக்கும், திறமைக்கும் ஏற்ப முன்னேற அனுமதிக்கலாம் என்றும் அவர் கூறியிருக்கிறாராம்.

தென்னாப்பிரிக்காவில் உள்ள டச்சு வெள்ளையருக்கும், ஆங்கிலேய வெள்ளையருக்கும் சமஉரிமை இருக்கவேண்டும் என்பது மற்றொரு அடிப்படை என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில்

இரு பாலங்கள்

இராமநாதபுரம் மாவட்டத்தில் இரண்டு பாலங்கள் அமைக்க சர்க்கார் உத்திரவிட்டுள்ளார்கள்.

ஒன்று, சாத்தூர்—செம்மேனி சாலையில், அர்ஜுன நதி மீது ரூ. 2,25,000 செலவிலும், மற்றொன்று சிவகாசி—கழுகுமலை சாலையில் ரூ. 3 லட்சம் செலவிலும் அமைக்கப்படும் என்றும் இதற்கான செலவை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

உலகமெலாம் கம்யூனிச மயமாக நடைபெறும் போட்டி

அச்சத்தையும் குரோதத்தையுமே உண்டுபண்ணுகிறது

தத்துவார்த்த போட்டி பற்றி பண்டித நேரு கருத்து

"உலகெங்கும் கம்யூனிச மயமாவதை ஒப்புக்கொள்ள வேண்டுமென்ற போராட்டத்தினுல், உலக நாடுகளில், கட்சிகளுக்கிடையே குரோதம் வளரும் அபாயம் இருக்கிறது."

"உலகக் கம்யூனிசம் என்று சொல்லப்படுவதின் அமைப்பு' இன்று இருப்பதைப்போல் இல்லாதிருந்தால், உலகில் குரோதமும் பயமும் குறைந்து காணப்படும்,"

—என்று பண்டித நேரு, லக்னேவில் பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது :—

"சீன கம்யூனிஸ்டு நாடு: ஆனல், அது எந்த நாட்டையும் பார்த்துக் காப்பியடிக்கவில்லை; தனது கொள்கையின் மூலமும், தேசிய நிலைகளுக்கு ஏற்பவும் நாட்டைத் திருத்தியமைத்துக் கொண்டது.

அணுகுண்டு யுகமான இக்காலத்தில், வெறும் தத்துவார்த்தங்களினுல் பயன் ஏதும்இல்லை சிலர் அமெரிக்காவைப் புகழ்ந்து, அதை நாம் காப்பியடிக்க வேண்டுமென்று கூறுகிருர்கள்; மற்றும் சிலர்—குறிப்பாகக் கம்யூனிஸ்டு கட்சியினர், சோவியத் முறையை நாம் பின்பற்ற வேண்டுமென்று கூறுகிருர்கள்.

மற்றவர்களால் பயன் அடைவதை நாம் தடுக்கவில்லை; ஆனல், இதன் மூலம் தேசிய நலனைப் புறக்கணிப்பது கூடாது.

கம்யூனிசத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று உலகம் முழுமையும் கடும்போட்டி ஏற்பட்டு, அதன் மூலம் கட்சி பேதம் ஏற்படும் நிலைமையைப் போக்கவே இந்தியா உள்நாட்டிலும், வெளிநாட்டுக் கொள்கையிலும் தனது நடைமுறையைப் பின்பற்றுகிறது.

சீன சிறையிலிருக்கும் அமெரிக்க விமானிகள்

விடுவிக்க ஐ. நா. முயற்சி

செஞ்சீனவில் வேவு பார்த்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு சிறை வைக்கப்பட்டிருக்கும் 11 அமெரிக்க விமானிகளைவிடுவிப்பதுபற்றி பேச்சு வார்த்தை நடத்த, தாம் சீனப்பிரதமரைச் சந்திக்க விரும்புவதாக, ஐ. நா. சபையின் பொதுச் செயலாலர் ஹு-என்-லாய்க்கு அனுப்பியுள்ள தந்தி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

டிசம்பர் 26-ந் தேதிக்குப் பின், தாம் சீனுவுக்கு வரத் தயாராயிருப்பதாகவும், அதுபற்றிப் பேச சீனப் பிரதமருக்கும் எப்பொழுது சந்தர்ப்பப்படும் என்று தெரிவிக்குமாறும் தந்தியில் கோரப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

காங்கிரஸ் கட்சியின் 'ஆள் பலம்' வெட்டவெளிச்சமாகிறது!

கோஷ்டிகளை வலுப்படுத்துவதற்கு போலி உறுப்பினர்கள்

பெப்சு மாநில காங்கிரஸ் கட்சியிலிருந்து 18,000 பேர் நீக்கப்படுகின்றனர்

பெப்சு மாநில காங்கிரஸ் கட்சியில் 18,000 பேர் போலி அங்கத்தினர்கள் எனக் காணப்பட்டு கட்சியிலிருந்து நீக்கப் பட்டுள்ளனர் எனத் தெரிகிறது.

கட்சியில் உள்ள கோஷ்டிகள் பல, தங்கள் பலத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக சுமார் 15,000 பேர்களை போலி அங்கத்தினர்களாக்கியிருந்தனராம்!

மேலும் 3 ஆயிரம் பேர்கள், தங்கள் உறுப்பினர் காலம் காலாவதியாகிவிட்ட பின்னும் தொடர்ந்து அங்கத்தினர் பதவி பெற்று வந்திருக்கின்றனர் எனக் கூறப்படுகிறது.

இந்தத் 'திருட்டு'த்தனங்கள் எல்லாம், ஆவடியில் நடைபெறவிருக்கும் காங்கிரஸ் மாநாட்டிற்கு பெப்சுவிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டிய 34 பிரதிநிதிகளுக்கான தேர்தலை ஒட்டி, கட்சி உறுப்பினர் பட்டியல் சீர்செய்யப்படுகிற நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனவாம்.

இந்த நடவடிக்கையினுல் பெப்சுவில் உள்ள காங்கிரஸ் உறுப்பினர் தொகை 63,000-த்திலிருந்து 45,000-மாகக் குறைந்துவிட்டது

ஆசிரியருக்கு முடங்கல்:

வேறு வழியில்லையா?

ஆசிரியர்: 'நம் நாடு'

1954 மார்ச்சு மாதம் நடக்கவிருக்கும் போதனுமுறை தேர்வுக்கு, 1954 செப்டம்பரில் பரீட்சை எழுதத் தவறியவர்கள் பரீட்சை பணம் செலுத்தும் முடிவு தேதி 24-12-54 ஆகும். ஆனல், 1954 மார்ச்சு மாதம்பரீட்சை எழுதத் தவறியவர்களுக்கு பணம் கட்டும் கடைசி தேதி 24—11—54. இந்த ஒரு மாத வேறுபாடு எதற்கு என்பது புரியவில்லை. என்னைப் போன்று, 'பரீட்சைக்குப் பணம் கட்டும் கடைசி தேதி எல்லோருக்கும் போலத்தான்' என எண்ணி நாளைத்தவறியவர்கள், இன்னும் ஓராண்டு ஏங்கிக் கிடப்பதன்றி வேறு வழியில்லையா? கல்வித் துறை அதிகாரிகள் தயவு செய்து இச் சஞ்சலமான வேறுபாட்டை ஒழித்து எல்லா மாணவர்களுக்கும் 24—12—54தான் கடைசி தேதி என உத்திரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சா. இலக்குமணசாமி,
தரங்கம்பாடி.

படித்தவர்களுக்கு வேலை தர - ஐதராபாத் அரசாங்கத்தின் திட்டம்?

17,000 பேர் வேலை வேண்டியுள்ளனராம்

சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் 55-வயது பூர்த்தியடையாதவர்களாயிருப்பினும் அவர்கள் 25 முதல் 30 வருடம் வரை பணி புரிந்தவர்களானல், அவர்களுக்கு ஓய்வு தந்துவிட சர்க்கார் முடிவு செய்திருப்பதாக முதல் மந்திரி வி. ராமகிருஷ்ண ராவ் அறிவித்துள்ளார்.

இந்த முடிவு, வேலையின்றி இருக்கும் பல படித்தவர்களுக்கு உத்தியோகம் தரும் எண்ணத்துடன் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கூறினர்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வழி வகைகளை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் ஆலோசனை அறிக்கையை சர்க்கார் பரிசீலித்து வருவதாயும், அந்த அறிக்கையை சட்டசபையின் விவாதத்திற்கும் முடிவுக்கும் வைக்கப்படுமெனவும் அவர் கூறியிருக்கிருர்.

வேலை தேடித்தரும் நிறுவனங்களில் பெயர்களைப் பதிவு செய்துள்ள பட்டியலில் 17,000 பேர் வேலையின்றி இருப்பதாகவும் அவர் கூறியிருக்கிருர்.

அணுகுண்டு தாக்குதல் நடத்தவும்கூட வசதியும், 60,000 டன் எடையுள்ளதுமான 'ராட்சச' விமானந்தாங்கிக் கப்பல் ஒன்று அமெரிக்காவைச் சேர்ந்த நியூபோர்ட்டில் வெள்ளோட்டம் விடப்பட்டதாம்.

கலந்து கொள்வர்

இந்தோனேஷியாவைச் சேர்ந்த ஜகார்தாவில் அடுத்த ஆண்டு பிப்ரவரியில் நடைபெறவிருக்கும் ஆசிய — ஆப்பிரிக்க மாநாட்டில் அரபு நாடுகள் கலந்துகொள்ள வேண்டும் என அரபு லீக் கவுன்சில் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

இளம் பெண்ணை கட்டாயமாகத் திருமணம் செய்ய முயற்சி

சாரதா சட்டத்தால் தடுக்கப்பட்டது

வயது முதிர்ந்த கிழவர் ஒருவருக்கு ஓர் இளம் பெண்ணை திருமணம் செய்யவிருந்ததை அகமதாபாத்திலுள்ள 'ஜோதி சங்கம்' என்ற பெண்கள் கழகம் சாரதா சட்டத்தின் மூலம் தடுத்து விட்டது.

இப்பெண்ணின் வயது 14-க்கும் குறைவு என்று தெரிகிறது.

'ஜோதிசங்கம்' என்ற கழகம், பெண்களின் பாதுகாப்பிற்காகப் பாடுபடும் கழகம் என்று தெரிகிறது. இக்கழகத்தினர், 14 வயதுக்குக் குறைந்த வயதுடைய இளம் பெண்ணை வயது வந்த ஒருவருக்குத் திருமணம் செய்யும் கொடுமையை எதிர்த்து, அகமதாபாத் நீதிமன்றத்தில், சாரதா சட்டத்தின் கீழ், வழக்குத் தொடர்ந்தனர். வழக்கை விசாரணை செய்த நீதிபதி, இத்திருமணம் நடைபெறுவது கூடாது என்று தடை விதித்தார்.

திருமணம் நடைபெற இருந்த கடைசி நேரத்தில் தடை உத்திரவு கிடைத்து, திருமணம் நிறுத்தப்பட்டது.

சதி வேலை செய்த சாகசக்காரி

அழகிய யூத மங்கை மீது வழக்கு

எகிப்திய அரசியல் கொந்தளிப்பு

மார்சலே நினே என்ற அழகிய, கருங் கூந்தலுடைய யூத மங்கையொருத்தி, கெய்ரோ, அலெக்சாண்டிரியா ஆகிய இடங்களிலுள்ள யூத துப்பறியும் இராணுவப் பிரிவுகளிடையே கள்ளத்தனமான தொடர்பு கொண்டிருந்ததாக உயர்தர இராணுவ நீதிமன்றத்தில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்.

கெய்ரோ, அலெக்சாண்டிரியா ஆகிய இடங்களிலிருக்கும் மாளிகைகளுக்குத் தீ மூட்ட முயன்றதாகவும், இஸ்ரேல் நாட்டிற்காகச் சதி வேலையில் ஈடுபட்டதாகவும் அந்த அழகு மங்கைமீதும், மற்றும் 12 - யூதர்கள்மீதும் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

யுத்தம் பயன்படாது!

லண்டன், டிச. 9—

"நீர்வளிக் குண்டுகள் கண்டுள்ள இந்தக் காலத்தில், மேற்கு ஜெர்மனியை ஆயுதபாணியாக்கி விடுவதால், ரஷ்யாவை விட மேற்கு வல்லரசுகள் அதிக வலிமை பெற்றுவிட முடியாது;

"நாடுகளிடையேயுள்ள தகராறுகளைத் தீர்க்க இனி யுத்தம் பயன்படாது; நாம் ரஷியாவுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி பரிகாரம் காண முயல வேண்டும்,"

என்று, பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் தீவிரவாதிகளின் தலைவர் அனுரின் பெவான் கூட்டமொன்றில் பேசுகையில் கூறியிருக்கிருர்.

மேற்கு வங்கத்தில் பஞ்சாயத்துக்கள் சீர்திருத்தம்

அதிக அதிகாரங்கள் வழங்க ஏற்பாடு

மேற்கு வங்கத்தில் பஞ்சாயத்துக்களை திருத்தி அமைப்பது பற்றிய திட்டங்கள் முடிவு பெற்று விட்டன என்றும், மந்திரிசபை இதுபற்றி தீர்மானித்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

ஆயிரம் மக்களைக் கொண்ட கிராமம் ஒன்றுக்கு பஞ்சாயத்து அமைக்கப்படும். இது போன்ற நான்கு பஞ்சாயத்துக்கள் சேர்ந்த பஞ்சாயத்துக் கழகம் ஒன்று அமைக்கப்படும்.

இப்படி இரண்டு முறைகளில் பஞ்சாயத்துக்களை அமைப்பது நீதி வழங்குதலை துரிதப்படுத்தும் நடவடிக்கையாகும்.

கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு நிர்வாகத்தன்மை அதிகாரங்கள் தரப்படும்; ஆனல், பஞ்சாயத்துக்கள் கழகத்திற்கு நீதி வழங்கும் பொறுப்பு கொடுக்கப்படும். பஞ்சாயத்துக்கள் கழகம், உறுப்பினர் பஞ்சாயத்துக்களின் மீது எவ்வித மேற்பார்வை அதிகாரமும் கொண்டதாக இருக்காது.

சொத்துக்களின் மீது விதிக்கப்படும் வரிதான் பஞ்சாயத்துகளின் முக்கிய வருமானமாக இருக்கும்.

வரி வசூலிக்கும் பொறுப்பு பஞ்சாயத்துக்கள் கழகத்தின் பொறுப்பு என்றும், செலவை அனைவரும் பங்கிட்டுக் கொள்வார்கள் என்றும் தெரிகிறது.

கிராம மக்களால் வரியை பணமாகக் கொடுக்க இயலாவிட்டால், அவர்கள், தங்கள் உழைப்பின் மூலம் அவ்வாறு செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிகிறது.

வயது வந்தோர் அடிப்படையில் பஞ்சாயத்துக்களுக்கு தேர்தல் நடைபெறும்; பஞ்சாயத்துக் கழகத்திற்கு பஞ்சாயத்து உறுப்பினர்கள் மூலம் தேர்தல் நடைபெறும்.

பஞ்சாயத்துக்கள் கழகத்திற்கு போதுமான சிப்பந்திகள் சம்பளத்துடன் நியமிக்கப்படுவார்கள்.

ஜமீன்தாரி ஒழிப்பிற்குப் பின்னர் பஞ்சாயத்துக்கள் கழகத்தின் பொறுப்புகள் அதிகமாகுமென்றும், நிலவரி வசூலிக்கும் பொறுப்பு அவர்களிடம் விடப்படுமென்றும் தெரிகிறது சில பிரச்சினைகளில், போலீஸ் வேலையும் ஒப்படைக்கப்படலாம்.

இதற்கான மசோதா ஒன்றை மேற்கு வங்க சர்க்கார் இப்போது தயாரித்து வருகிறது. மேற்கு வங்க சட்டசபையில் அடுத்த வரவு—செலவு கூட்டத்தில் இந்த மசோதா கொண்டுவரப்படும்.

சிந்து முஸ்லிம் லீக்

முதன் மந்திரி கட்சித் தலைவராகத் தேர்வு

சிந்து முதன் மந்திரி எம். ஏ. குர்ரோ, சிந்து சட்டசபை முஸ்லிம் லீக் கட்சிக் கூட்டத்தின் போது கட்சித் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; ரெவினியூ மந்திரி பீர்அலி முகமது ரஷீத் உபதலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் எனத் தெரிகிறது.

இந்தியாவில் எஃகுத் தொழிற்சாலை

பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடைபெறுகிறதாம்!

இந்தியாவில் எஃகுத் தொழிற்சாலை அமைப்பது சம்மந்தமாக வெள்ளையரின் கம்பெனி ஒன்றுடன் பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என பண்டிதநேரு சூசகமாகத் தெரிவித்திருக்கிருர்.

மழை நின்றும்...

சைகோன், டிச. 12—

வியட்நாமில், பாகுட் என்ற 'பயங்கர' தளபதியின் கீழ் உள்ள துருப்புகள், இந்தோ-சீனப்போர் நிறுத்தத்தை எதிர்த்து கலகம் செய்கின்றனராம்.

இவர்கள் மீது அரசாங்க இராணுவத்தினர் கடும் போர் தொடுத்து, 'பாகுட்' துருப்புகளை ஒரு மலைப் பகுதியில் வளைத்துக் கொண்டுள்ளனராம். அரசாங்க இராணுவத்தினர், இந்த கலகம் செய்யும் சில்லறைப் படையினரை அடக்க பாரசூட் படையையும் உபயோகித்து வருகின்றனராம்!

மாஸ்கோ — பீகிங் இரயில் பாதை

நீளம் குறைகிறது

மாஸ்கோ - பீகிங் இவற்றிற்கிடையே புதிய இரயில் பாதை ஒன்றை சீன சர்க்கார் அமைத்துள்ளது என்று தெரிகிறது.

புதிதாக அமைக்கப்பட்ட பகுதி ஒன்றின் மூலம் மாஸ்கோ - பீகிங் இடையே 620 மைல் தூரம் பிரயாணம் குறையுமென்று தெரிகிறது.

பீகிங் - டின்சிங் - மங்கோலியக் குடியரசின் தலைநகரமான உலன் பாடோர் - டிரான்ஸ் - சைபீரியன் இரயில்வே இவைகளின் மூலம், இப்போது, பீகிங்கிலிருந்து மாஸ்கோ செல்ல முடியும் என்று தெரிகிறது.

சென்னை சட்ட சபையில்....

★

எப்போது?

"விற்பனை வரியை ஒரு முனையில் விதிப்பது எப்போது?" என்று கேட்கப்பட்டபோது, ரெவினியூ மந்திரி மாணிக்கவேலு நாயகர், இதுபற்றி வரி விசாரணைக் குழுவின் அறிக்கை கிடைத்த பின்தான் சர்க்கார் ஒரு முடிவுக்கு வருமெனத் தெரிவித்திருக்கிறார்.

"ஒரு முனை விற்பனை வரி விதிப்பு சாத்தியம் குறித்தும் சர்க்கார் ஆலோசித்து வருவதாக முதன் மந்திரி மதுரையில் குறிப்பிட்டது உண்மைதான்; இது பற்றி சர்க்காரிடம் எவ்விதத் திட்டமும் இல்லை," என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

"உணவுப் பண்டங்களின்மீது விதிக்கப்படும் விற்பனை வரியையாவது உடனடியாக ரத்து செய்வதுபற்றி சர்க்கார் கவனிக்குமா?" என்று ஒருவர் கேட்டபோது, "வரி விசாரணைக் குழுவின் அறிக்கையை சர்க்கார் எதிர்நோக்கியுள்ளது; அது, பல விஷயங்களுக்கும் உதவக் கூடியதாயிருக்கலாம்," என்றும் மந்திரி மாணிக்கவேலர் தெரிவித்திருக்கிறார்.

"ஒருமுனை வரி விதிப்பால் அரசாங்க வருமானத்தில் எவ்வளவு குறையுமென்பதும் கவனிக்கப்படும்," என்றார் மந்திரி.

வெகு சீக்கிரம்?

வட்டார நாட்டாண்மைக் கழகங்களை நிறுவும் பிரச்னை இன்னும் சர்க்கார் பரிசீலனையிலிருப்பதாகவும், இது பற்றிய முடிவை சர்க்கார் வெகு சீக்கிரம் மேற்கொள்ளுவார்கள் என்றும் கனம் ராமசாமிப் படையாச்சி தெரிவித்திருக்கிறார்.

ஊழல்கள் மலிகின்றன! உறுதிகள் பெருகுகின்றன!

கூட்டுறவு நிறுவனங்களில் ஊழல்கள் மலிந்து வருவதாகக் கூறப்படும் புகார்கள் வரும் போதெல்லாம், அவை கவனிக்கப்பட்டு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக மந்திரி சபையில் தெரிவித்திருக்கிறார்.

கூட்டுறவு நிறுவன விஷயங்களைப் பரிசீலனை செய்து அபிவிருத்திக்கான சிபாரிசுகளைச் செய்ய சர்க்கார் ஒரு பரிசீலனைக் குழுவை நியமிக்கவிருப்பதாயும் அக்குழு இத்தகு ஊழல்கள் குறித்தும் இதுவரை அந்த விரிவான, உபயோகம் மிகுந்த இயக்கத்தில், கிடைத்துள்ள அனுபவங்கள் குறித்தும் பரிசிலனை செய்து சர்க்காருக்குத் தெரிவிக்குமென்றும் மந்திரியார் உறுதி கூறியிருக்கிறார்.

குடும்பக் கட்டுப்பாடு

"சென்னை மாநிலத்தில், நகரில் உள்ள சில மருத்துவ மனைகள் உட்பட பல இடங்களிலும் குடும்பக் கட்டுப்பாடு பற்றி ஆலோசனைகள் தருவதற்கான பிரிவுகள் திறக்கப் படுவதற்கு சர்க்கார் அனுமதி யளித்துள்ளது; குடும்பக் கட்டுப்பாடு பற்றிய ஆலோசனை வழங்கும் திட்டம் கிராமங்களுக்கும் விரிவாக்குவது பற்றி சர்க்கார் கவனிக்கும்; இந்தத் தனிப் பிரிவுடைய மருத்துவ மனைகளில், குடும்பக் கட்டுப்பாடு குறித்து தம்பதிகளிருவருக்குமே ஆலோசனை வழங்கப்படும்," என்று சுகாதார மந்திரி ஏ. பி. ஷெட்டி தெரிவித்திருக்கிறார்.

பி. சி. ஜி. ஊசி

"பி. சி. ஜி. ஊசி குத்துவது உபயோககரமானது, காசநோய் தடுப்புக்கு பெரிதும் அது உதவுகிறது என உலகெங்கணுமுள்ள டாக்டர்கள் கருத்தறிவிப்பதால், அது உபயோகமற்றது என்ற கூற்று சரியானதல்ல; மாநிலத்தின் எல்லா மாவட்டங்களிலும் இந்த ஊசி குத்தும் இயக்கம் பரவலாக ஆரம்பிக்க சர்க்கார் முடிவு செய்துள்ளது; நகரங்களில் இது முதலில் அமுல் செய்யப்படுகிறது: அண்மையில், கோவையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது," என்ற தகவலை மந்திரி ஷெட்டி தெரிவித்திருக்கிறார்.

பரிசீலிக்கிறோம்!

"ஆரம்ப ஆசிரியர்களுக்குத் தரப்பட்டுள்ள சம்பள உயர்விலிருந்து தாங்கள் நீக்கப்பட்டிருப்பது பற்றி ஆரம்பத் தொழில் கல்வி ஆசிரியர்கள் (பிரி-வொகேஷனல்) சங்கம் அனுப்பியுள்ள கோரிக்கைகளை சர்க்கார் பரிசீலித்து வருகிறது," என்று நிதி மந்திரி கூறியிருக்கிறார்.

முதியோர் கல்வி

1953—54-ம் ஆண்டில் முதியோர் கல்விக்காக ரூ. 3,47,625 செலவிடப்பட்டதென்றும், இதனால் 11,075 பேர் பயன் அடைந்தனர் என்றும், நிதி மந்திரி கூறினார்.

பள்ளிகளும் பஜனை மடங்களா?

கல்வி நிறுவன கட்டிடங்களில் மதவழிபாடு, பஜனைகள் போன்றவற்றிற்கு அனுமதியளிப்பது சம்பந்தமாக விரிவான உத்தரவொன்றை சர்க்கார் பிறப்பித்திருப்பதாக கல்வி மந்திரி சுப்பிரமணியம் அவர்கள் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் கூறியிருக்கிறார்.

அணை கட்டுவது சாத்தியமல்லவாம்!

மதுரை மாவட்டத்திலுள்ள வராக நதி மீது தென்பாரை அல்லது சஸ்தகோவிலில் ஒரு பாசன அணைகட்ட வேண்டுமென 1952ம் ஆண்டில் சரியகுளம் விவசாயிகளிடமிருந்து ஒரு கோரிக்கை வந்தது என்றும், இதுபற்றிப் பரிசீலித்தபோது இந்ததிட்டம் நடைமுறையில் சாத்தியமற்றது என்று தெரிய வந்ததென்றும் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் மராமத்து மந்திரி ராமநாதபுரம் ராஜா தெரிவித்திருக்கிறார்.

ஆங்கிலம் இனியும் போதனு மொழியாக இருக்க முடியாது!

ஆங்கில ஆசிரியர் மாநாட்டில் பேச்சு

அலிசார் பல்கலைக் கழகத்தில் அகில இந்திய ஆங்கில ஆசிரியர் மாநாடு ஒன்று நடைபெற்றது. 100-க்கும் அதிகமான பிரதிநிதிகள் இந்தியாவின் எல்லா பல்கலைக் கழகங்களிலிருந்தும் வந்திருந்தனர். அதுபோது எல்லோரையும் வரவேற்று டாக்டர் ஜகீர் ஹூசேன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"ஆங்கிலம், போதனு மொழியாயிருப்பதா அல்லது நவீன ஐரோப்பிய மொழியாக இயங்குவதா எனப் பாகுபாடு செய்வதுதான், இன்று இந்தியாவில் ஆங்கில மொழியின் அடிப்படைப் பிரச்சினையாகும்.

"பிராந்திய மொழி வளர்ச்சி வேகமாக உள்ளது. பல்வேறு தாய்மொழிகள் போதனு மொழியாக மாறவேண்டும்—மாறிவருகின்றன. அந்த நிலையில், இனியும் தொடர்ந்து ஆங்கிலம், போதனு மொழியாயிருக்க முடியாது: எனவே ஆங்கிலப் பேராசிரியர்கள், இந்தியாவில் ஆங்கில மொழி, தற்காலத்திய மொழிகளுள் மிகச் சிறந்த ஐரோப்பிய மொழியாக ஆங்கிலம் போதிக்கப்படுவதற்கான வழிவகைகளைக் கண்டறிய வேண்டும்."

'தாய் நாடு'

தோழர் பி. எஸ். மதிவாணன் அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'தாய் நாடு' வார இதழ், 1955 ஜனவரி 7-ந் தேதி முதல் வெளிவருமென்று அறிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் 1953-ம் ஆண்டில் ஒரு நபருக்கு 15 கஜம் வீதம் துணி கிடைத்துவந்தது.

தோழமைக் கழகம்

சென்னை தோழமைக் கழகச் சார்பில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைக்கொண்டு நடத்தப்பட்ட மூன்று சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டங்களின் வரவு-செலவு கணக்கு விவரம்:—

மொத்த வரவு	ரூ.	1,007- 4-0
,, செலவு	ரூ.	347- 8-0
மீதி	ரூ.	659-12-0
'நம் நாடு' வளர்ச்சிக்கு அன்பளிப்பு	ரூ.	164-15-0
'மன்றம்' வளர்ச்சிக்கு அன்பளிப்பு	ரூ.	304- 7-0
தோழமைக் கழக வளர்ச்சிக்கு	ரூ.	190- 6-0
ஆக மொத்தம்	ரூ.	659-12-0

['நம்நாடு' வளர்ச்சிக்காக உதவிய தொகை ரூ. 164—15—0 (ரூபாய் நூற்றிஅறுபத்துநான்கும் அணு பதினைந்தும்) பெற்றுக்கொண்டோம் — நன்றி — பொறுப்பாளர்.]

அறிவு வளர்ச்சிமன்றம்

சென்னை எழும்பூர் அறிவு வளர்ச்சி மன்றத்தின் சார்பில் 7—11—54 ஞாயிறு காலை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டத்தின் வரவு-செலவு விவரம்:—

மொத்த நுழைவுச் சீட்டுகள் விற்பனை	ரூ.	542- 0-0
கல்லக்குடி வழக்கு நிதிக்குக் கொடுத்த ரூ. 25 உள்பட மொத்த செலவு	ரூ.	185- 3-3
நீக்கி கையிருப்பு	ரூ.	356-12-9

மேற்படி தொகை, துணைத் தலைவர் பொ. பழனி, பொருளாளர் இரா. வேங்கடன் ஆகிய இருவர் பெயரில் பாங்கியில் போடப்பட்டுள்ளது.

இரா. சு. தங்கப்பழத்துக்கு வரவேற்பு

பம்பாய்—சயன் தி. மு. கழக முதலாவது ஆண்டு நிறைவிழாவில் கலந்துகொள்ள வந்த தோழர் இரா. சு. தங்கப்பழம் அவர்களை தாதர் புகைவண்டி நிலயத்தில், 9—12—54 பிற்பகல் 1 மணிக்கு கழகத் தோழர்கள் மலர்மாலைகள் அணிவித்து வரவேற்றனர்.

லஞ்சவழக்கில் திரைப்படம்சாட்சியம்

பம்பாய் வழக்கில் புதுமை

பம்பாய், டிச. 13—

பம்பாய் மாகாண சரித்திரத்தில், இன்று முதல் தடவையாக, வழக்கொன்றில் சாட்சியாக படம் ஒன்று திரையிடப்பட்டது.

இப்படத்தை நீதிபதி பி. சி. வக்கீல், சர்க்கார் தரப்பு வக்கீல், குற்றம் சாட்டப்பட்டவர், எதிரி தரப்பு வக்கீல் ஆகியோர் பார்வையிட்டனர்.

பம்பாய் போலீசைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் கே. ஆர். தேஷ் பாண்டே என்பவர், பால் சந்திர கீர் என்பவரிடமிருந்து ரூ. 650 லஞ்சம் வாங்கியதாக வழக்கு.

இந்த வழக்கை, தனி நீதிபதி பி. சி. வக்கீல் விசாரணை செய்கிறார்.

பால் சந்திர கீர் மீதுள்ள வீடு புகுந்து திருடிய வழக்கொன்றை மறைப்பதற்காக லஞ்சம் வாங்கியதாக வழக்கு.

பால்சந்திர கீர், லஞ்ச ஒழிப்பு இலாகாவினருக்கு சப்-இன்ஸ்பெக்டரின் போக்கு பற்றி தெரிவித்தாராம்.

இவர்கள் முன்னேற்பாடு செய்து, போலீஸ் புகைப்படப் பிடிப்பாளர் ராஜி என்பவரை நியமித்து, படம் எடுக்க ஏற்பாடு செய்தார்கள் என்று சொல்லப்படுகிறது.

பால் சந்திரகீரின் படுக்கை அறையின் மேல் உள்ள 'வெண்டிலேடரில்,' புகைப்படப் பிடிப்பாளர் திரைப்பட காமிரா ஒன்றைப் பொருத்தினர் என்று தெரிகிறது.

பால் சந்திர கீர், தனது காலில் காயம்பட்டதாக நடித்து படுக்கையில் இருந்தாராம். குறித்த நேரத்தில் சப்-இன்ஸ்பெக்டர் தேஷ் பாண்டே வந்தார். பால் சந்திர கீரிடம் கத்தைகத்தையாக நோட்டுகளைப் பெற்று சப்-இன்ஸ்பெக்டர் அவைகளைத் தனது பைக்குள் வைக்கும் காட்சியை மேலே இருந்த திரைப்பட காமிரா படம் எடுத்ததாம்.

வழக்கில், இந்தக் காட்சியின் திரைப்படச் சுருள், ராஜியினால் சாட்சியாக வைக்கப்பட்டதாம்.

சர்க்கார் தரப்பு வக்கீலின் மனுவின்பேரில், நீதிபதி, படத்தைக் காண ஒப்புக்கொண்டாராம். படம் பம்பாயில் உள்ள கோடக் கம்பெனியாரின் சிறிய தியேட்டரில் திரையிடப்பட்டதாம்.

குலாம்—சுஹ்ரவர்த்தி சந்திப்பு

பாகிஸ்தான் கவர்னர்—ஜெனரல் குலாம் முகமது, அவாமி லீகின் தலைவரான சுகரவர்த்தியை அரசியல் நிலைபற்றி விவாதிக்க அமைத்துள்ளாரெனக் கூறப்படுகிறது.

அநேகமாக, கவர்னர் ஜெனரல், சுகரவர்த்தியை மத்திய சர்க்காரில் சேர்ந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளலாம்; அல்லது, கிழக்கு பாகிஸ்தானிலுள்ள தமது கட்சியின் தலைமைப் பதவியையாவது ஏற்கும்படி கேட்டுக்கொள்ளப்படுவார் என்றும், அப்படி கிழக்கு பாகிஸ்தானில் ஐ. மு. தலைமைப் பதவியை அவர் ஏற்றுக்கொண்டால் மீண்டும் அங்கே மக்கள் பிரதிநிதிகளின் சர்க்கார் ஏற்படுகையில் அவர் முதலமைச்சராகவும் வரலாம் என்றும் கூறப்படுகிறது.

இதுபற்றி ஆலோசிக்க மாநில அவாமி லீக் தலைவர்கள் எல்லாரும் கராச்சியில் கூடியுள்ளனர். அவர்களெல்லோரையும் கலந்துகொண்ட பின்னர்தான் சுகரவர்த்தி ஒரு முடிவுக்கு வருவார் என்று கூறப்படுகிறது.

கேட்டறிந்தனர்!

சென்னை, டிச. 13—

சென்னை நாடகக் கட்டுப்பாடு மசோதா (1954) பற்றி ஆய்ந்தறிய நியமிக்கப்பட்டுள்ள பொறுக்குக் குழு இன்று மாலை நிதி மந்திரி கனம் சுப்பிரமணியம் தலைமையில் சர்க்கார் அலுவலகத்தில் கூடியது.

மசோதாவின் பல்வேறு பிரிவுகள் குறித்தும் சென்னை நடிகர் சங்கப் பிரதிநிதிகளாக, கலைஞர்கள் டி. கே. சண்முகம், எம். ஜி இராமச்சந்திரன், என். எஸ். நாராயண பிள்ளை, டி. எஸ். துரைராஜ், சிவதாணு இன்னும் சிலர் சென்று, பொறுக்குக் குழுவிடம் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லி, அந்த மசோதா மீது தங்கள் கருத்தைத் தெளிவாக்கிய அறிக்கை ஒன்றையும் தந்தனர்.

பின்னர், தோழர் எம். ஆர். இராதாவும் மசோதா பற்றிய தனது அபிப்பிராயத்தை எடுத்துக் கூறினர்.

அறிவைக்கண்டு அஞ்சும்அமெரிக்கா

தாயகம் திரும்ப 35 சீனர்களுக்கு அனுமதி மறுக்கிறது

போர்க் காலத்தில் கம்யூனிச நாடுகளுக்கு உதவுவார்கள் என்ற பீதி!

வாஷிங்டன், டிச. 11—

அமெரிக்க சர்க்கார் தனது நாட்டில் கல்வி பயின்று தேர்ச்சி பெற்ற கம்யூனிஸ்டு சீன மாணவர்களை சிறிது சிறிதாக சீனு செல்ல அனுமதித்து வருகிறது என்று சர்க்கார் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஆனல் 35 மாணவர்களுக்கு தங்கள் தாய் நாடான கம்யூனிஸ்டு சீனு செல்ல அமெரிக்கா அனுமதி மறுத்துவிட்டது என்று அவர் கூறினர்.

இந்த மாணவர்கள் விஞ்ஞானத்தில் சிறந்த தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்றும், இவர்கள் போருக்கான முயற்சிகளில் கம்யூனிஸ்டு நாடுகளுக்கு மிகவும் உதவியாக இருப்பார்கள் என்ற காரணத்தாலும் இந்த 35 மாணவர்களை தாய்நாடு திரும்ப அமெரிக்கா அனுமதிக்காமல் இருக்கிறதென்றும் அந்த அதிகாரி மேலும் கூறியுள்ளார்.

கொரியா மீது, சீனு போர் தொடுத்தபோது, அமெரிக்க நாட்டில் 4,500 சீன மாணவர்கள் இருந்தனர் என்றும், இவர்களில் 450 பேர் ஊர் திரும்ப அனுமதி கோரினர்கள் என்றும், ஆனல் 124 பேர் மட்டுமே தாயகம் திரும்ப அனுமதிக்கப்பட்டார்களாம்.

ஜெனீவா மாநாட்டிற்குப் பின்னர் 62 பேர் சீனு செல்ல அனுமதி கோரினர்கள்; ஆனல் 27 பேர்கள் தான் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

மற்ற 35 மாணவர்களுக்கும் அமெரிக்காவில் வேலை கிடைப்பதைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை என்றும், ஆனல் இந்த மாணவர்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தங்களின் இருப்பிடம் பற்றி அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் சர்க்கார் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

ரஷ்யப் புத்தகங்கள்

ரயில் நிலையங்களில் விற்பது குறித்து விவாதம்

புதுடில்லி, டிச. 13—

இந்திய இரயில்வே நிலையங்களில் ரஷ்யப் புத்தகங்களின் விற்பனைக்குத் தடை இருப்பது பற்றி மீண்டும் ராஜ்ய சபையில் கேள்விகள் எழுந்தன.

ஒரு சமயம், உதவி ரயில்வே மந்திரி அழகேசன், "ரஷ்யாவில் காந்தீய நூல்கள் விற்கப்படுகின்றனவா?" என்று ஒரு கம்யூனிஸ்டு அங்கத்தினரிடம் எதிர் கேள்வி கேட்டார்

உடனே சபைத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் குறுக்கிட்டு, "அந்த அங்கத்தினர் ரஷ்ய சர்க்கார் சார்பில் பதிலளிக்கவில்லையென்றும் திரு. அழகேசன்தான் இந்திய சர்க்கார் சார்பில் பதிலளிப்பவர் என்றும், திரு. அழகேசன் பதில் சொல்ல வேண்டுமே தவிர கேள்வி கேட்கக் கூடாது" என்றும் குறிப்பிட்டார்.

திருக்குறள் வகுப்பு

15—12—54 மாலை 6 மணிக்கு சென்னை, புரசைவாக்கம், எண் 100, வெள்ளாழத் தெரு, தொண்டைமண்டல வேளாளர் சங்கத்தில், தோழர் க. அன்பழகன் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணுதுரை, எம். ஏ.,